JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

C.C.No. 108/2020 Date:13.03.2023 P.W. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி |
| தந்தை பெயர், க/பெ | : | சந்திரபாலன் |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 13th day of March 2023.

எதிரி ஆஜரில் இல்லை. ச/பி 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது சிதம்பரம், கடலூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாம் நேஷனல் வங்கி மேலாளராக பணி புரிந்து வருகிறேன். நான் சம்பவத்தின் போது முத்தாப்புதுபேட்டை பஞ்சாப் நேஷனல் வங்கி மேலாளராக பணியிலிருந்த போது கடந்த 05.12.2019ம் தேதி காலை 7.00 மணியளவில் நான் வீட்டில் இருக்கும் போது அதிகாலை 2.30 மணியளவில் முத்தாப்புதுபேட்டை வங்கி அருகே ஏடிஎம் சென்டர் கொல்லையடிப்பதற்கான முயற்சி நடந்ததாகவும், எங்களுடைய வட்டார அலுவலகத்திற்கு அலார்ட் வந்தது. நான் உடனடியாக அங்கே சென்று ஏடிஎம் சென்டரை பார்த்தபோது ஏடிஎம் மிஷனில் முன் கதவு திறக்கப்பட்டு அதில் உள்ள பணத்தை திருடுவதற்கான முயற்சிகள் நடந்தது தெரியவந்தது.

2. மேலும் ஏடிஎம் சென்டரில் உள்ள சிசிடிவி கேமராவில் நாங்கள் ஆராய்ந்து பார்த்த போது அந்த கேமராவின் முகப்பில் பிளாக் ஸ்பிரே அடித்திருந்தார்கள். அவர்கள் அடித்தியிருந்ததால் நாங்கள் யார் என்று சரியாக அந்த நபரை காண முடியவில்லை. மேலும் அன்றைய தினம் அந்த ஏடிஎம் ல் சுமார் 16,00,000 லட்சம் ரூபாய் இருந்தது. அதன்பின்பு காவல் நிலையம் சென்று ஏடிஎம்மை கொல்லையடிக்க முயற்சித்த நபர்களை கண்டுபிடிக்குமாறு புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் **அதசாஆ.1.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

3. எங்களுடைய வங்கியின் ஏடிஎம் சென்டரில் கொல்லை முயற்சி நடைபெற்றது முதலில் யாருக்கு தெரிய வந்தது என்றால் மும்பையில் இருக்கும் செக்கியூரன்ஸ் என்ற அமைப்பிற்கு அலார்ட் சென்றது. அதன் மூலமாக அவர்களுக்கு தெரியவந்தது. அவர்கள் மூலமாக தான் எங்களுடைய வட்டார அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் குறித்து எனக்கு யார் மூலமாக தகவல் கொடுக்கப்பட்டது என்றால் திரு. பழனி மற்றும் சுதிர் ஆகிய வங்கி அலுவலர்கள் மூலமாக எனக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

4. எத்தனை மணிக்கு எனக்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றால் அன்றைய தினம் காலை சுமார் 7.00 மணியளவில் சம்பவத்தை தெரிந்து கொண்டேன். சம்பவயிடத்திற்கு நான் 10.00 மணிக்கு சென்றேன். என்னுடன் யார் யார் வந்தாக்கள் என்றால் திரு.நெல்சன் என்ற வங்கி அலுவலர் என்னுடன் வந்தார். இடைப்பட்ட நேரத்தில் நாங்கள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தோமா என்றால் செக்கியுரன்ஸ் அமைப்பிலிருந்து நேரடியாக வட்டார அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டு வட்டார அலுவலகத்திலிருந்து போலீஸ் அவசர உதவி எண் 100க்கு தகவல் கொடுக்கப்பட்டது.

5. வட்டார அலுவலகத்திலிருந்து காவல் துறைக்கு எப்போது தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் அதிகாலை 2.30 மணியளவில் தகவல் கொடுக்கப்பட்டது. நான் சம்பவயிடம் சென்ற போது போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். போலீசார் எப்பொழுது சம்பவயிடம் வந்தார்கள் விசாரணையை ஆரம்பித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசாருடன் கைரேகை நிபுணர்கள் யார்

யார் வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அவ்வாறு நடைபெற்றுயிருந்தால் நான் உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur

JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

C.C.No.108/2020 Date:13.03.2023 P.W. 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜோசப் |
| தந்தை பெயர், க/பெ | : | ராஜகோபால் |
| முகவரி | : | |
| கிராமம் | : | |
| மாவட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 13th day of March 2023.

எதிரி ஆஜரில் இல்லை. ச/பி 317 கு.வி.மு.ச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை -**

1. நான் தற்போது கன்னியம்மன் நகர், 5வது தெரு, சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாப் நேஷனல் வங்கியில் முத்தாப்புதுபேட்டையில் ஜெப்த்ரியாக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2019ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. வங்கியின் மேலாளர் எனக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்தார். அவர் என்னிடம் யாரோ ஏடிஎம் உடைத்துவிட்டார்கள் வாருங்கள் என்று கூறியதின்பேரில் நான் சம்பவயிடம் சென்றேன். அப்பொழுது ஏடிஎம் உடைக்கப்பட்டியிருந்தது போலீசார் அங்கு நின்றுகொண்டியிருந்தார்கள். அதன்பின்பு நான் எனது அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன்.

**(அரசு தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதாக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

**மறு விசாரணை-** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur